සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| දෙවන වාර පරීක්ෂණය | **2018** | **11 ශ්‍රේණිය** |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **Second Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **வரலாறு** | **I** | **ஒரு மணி** |
| **ඉතිහාසය** | **I** | පැයක් |
| ***History*** | **I** | **One Hour** |

**பகுதி I**

**கவனிக்க:**

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க. இந்த வினாப்பத்திரத்திற்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **இல 1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(01) இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களில் புத்தசாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்டுள்ள மூலாதாரமாக அமைவது

i. தீபவம்சம் ii. நிகாய சங்கிரகய iii. மகாவம்சம் iv. ராஜாவலிய

Education கல்வி அධ්‍යාපන

(02) வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களுல் இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று எழுதப்பட்ட நூல் எது?

i. ரிபைரோவின் இலங்கை பற்றிய நூல்

ii. அரிஸ்டோட்டலின் டிமுண்டோ

iii. பிளினியின் நெசுரலிஸ் ஹிஸ்டோரியா

iv. ஹியுங்சாங் பிக்குவின் தேச சஞ்சார அறிக்கை

(03) வரலாற்றுக்கு முற்பட்ட கால தாழ்நில ஈரவலய குகைகளுள் ஒன்று.

i. மினிஹாகல்கந்த ii. சீகிரிய பொத்தான

iii. பெல்லன்பதி பெலஸ்ஸ iv. குருவிட்ட பட்டதொம்பலென

(04) கி.மு.1ம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் கிருந்தி ஓயாவுக்கு குறுக்காக அணை ஒன்று கட்டப்பட்டு திஸ்ஸ மகாராம குளத்தை கட்டுவித்த மன்னன்

i. கஜபாகு ii. அபயநாக மன்னன்

iii. குட்ட கண்ண அபய மன்னன் iv. இளநாக மன்னன்

(05) பண்டைய பௌத்த விகாரையில் உள்ள ஒரு கல்வெட்டில் அவ்விகாரைப் பிக்குகளுக்கு தானம் வழங்குவதில் ஏதும் பிரச்சினைகள் நேர்ந்தால் பத்துக் கிராமப் பிரதானிகளும் சேர்ந்து அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு,

i. களுதிய பொகுண கல்வெட்டு ii. மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு

iii. பதுளை தூண் கல்வெட்டு iv. சங்கமுவ கல்வெட்டு

(06) வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிட்டுள்ளவாறு தனது பத்தாவது ஆட்சி வருடத்தில் நாட்டில் கிராம எல்லைகளை வகுத்த மன்னன் யார்?

i. துட்டகைமுனு மன்னன் ii. பண்டுகாபய மன்னன் iii. தேவனம்பியதீச மன்னன் iv. வசப மன்னன்

(07) துட்டகைமுனு மன்னனின் சேவைகளில் பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.

i. ஒழுங்கமைக்கப்பட்ட யுத்த செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்கியவன்

ii. பருமகமாரின் ஒத்துழைப்பை பெற்று அரசியல் அதிகாரத்தை மையப்படுத்தினார்.

iii. நிர்வாக மட்டங்கள் பிரிக்கப்பட்டு அரசியல் அதிகாரத்தை கொண்டு செல்லல்

iv. முதன் முதலாக நாட்டை ஒன்றுபடுத்திய மன்னன்

(08) வரலாற்று மூலாதாரங்களின்படி முதன் முதலில் இலங்கையில் பெரிய குளங்களை அமைப்பதற்கு வழிகாட்டிய மன்னன்

i. இளநாக மன்னன் ii. வசப மன்னன் iii. அபய மன்னன் iv. தாதுசேன மன்னன்

(09) கி.பி.9ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களில் ''எக்தென் சமிய'' எனும் சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டிருப்பது,

i. யாப்பு அறிமுகம் செய்தல் ii. அதிகாரப் பகிர்வு அறிமுகப்படுத்தல்

iii. சட்ட நிர்வாகத் துறைகள் அறிமுகம் செய்தல் iv. நீதித்துறை அறிமுகம்

(10) நான்காம் காசியப்ப மன்னனின் காலத்தில் கடுமையான காய்ச்சல் பரவியது. காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களை பராமரிக்க அதற்கென நிறுவிய தனியான வைத்தியசாலை எது?

i. பசவந்தி நாமசால ii. வெஜ்ஜசால

iii. சிவிகா ஷாலா iv. உபசக்க ரோகநாச

(11) பண்டைய காலத்தில் இந்நாட்டில் முன்னேற்றகரமாக விளங்கிய கைத்தொழில்களை மேற்கொண்ட கலைஞர்களை அழைக்கப்பட்ட விதம் A நிரலில் காட்டப்படுவதுடன் B நிரலில் கைத்தொழில்களும் காட்டப்பட்டுள்ளன. A மற்றும் B இணைப்பதன் மூலம் சரியான விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| கபர | A நூல் நூற்பவர் |
| தடிக | B சித்திரம் வரைபவர் |
| ததவய | C இரும்புத் தொழில் |
| சிதகர | D தந்தச் செதுக்கல் |

i. ABCD ii. CDAB iii. DCBA iv. BADC

(12) இந்நாட்டின் புராதன வரிச் சட்டத்தின் கீழ் அரசனுக்குரித்தான காணி நிலங்களில் பயிரிடல் தொடர்பாக செலுத்தப்பட்ட வரி எவ்வாறு அழைக்கப்பட்டது

i. மதுரமஞ்சக்க ii. தக்கபதி iii. போஜக்கபதி iv. கெடுகனக

(13) பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முறைகளில் மிகச்சிறிய அளவை எது?

i. வியத்த ii. அங்குலம் iii. கவ்வ iv. பரமாணு

(14) எமது நாட்டு புராதன கால மன்னர்கள் தண்டனைச் சட்டம் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டதாக கருதப்பட்ட தகவல்கள் அடங்கிய மகிந்த அரசனின் கல்வெட்டு எது?

i. வேவல்கெட்டிய கல்வெட்டு ii. மிகிந்தலைக் கல்வெட்டு

iii. வெஸ்ஸகிரிய கல்வெட்டு iv. ஹோப்பிடிகமுவ கல்வெட்டு

Education அධ්‍යාපන

(15) சாலிய குமாரவின் மனைவி அசோகமாலா துட்டகைமுனு மன்னனின் மாளிகையில் சுவையான உணவு தயாரித்து அனைவரினதும் மனதை கவர்ந்ததாக குறிப்பிடப்படும் மூலாதாரம் எது?

i. தம்பியா அட்டுவாகெடபத
ii. ரசவாஹினி
iii. சத்தர்மாலங்கார
iv. சத்தர்மரத்னாவலிய

(16) கி.மு 700 - 450 இடைப்பட்ட காலகட்டத்தில் பெறுமதியான மாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட கல்லறை எது?

i. பெரகல
ii. உடரஞ்சாமடம
iii. யடிகல்பொத்த
iv. இப்பன்கடுவ

(17) சூழலைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின்கீழ் உயரமான பிரதேசங்களில் காடழிப்பதை தடுக்கும் முகமாக நியமிக்கப்பட்ட அநுராதபுர அரசன்

i. நான்காம் மகிந்த மன்னன்
ii. மூன்றாம் உதய மன்னன்
iii. ஐந்தாம் காசியப்ப மன்னன்
iv. ஐந்தாம் மகிந்த மன்னன்

(18) பொலன்னறுவை இராசதானி படிப்படியாக விழ்ச்சியடையக் காரணம் அல்லாதது

i. பலவீனமான மன்னர்கள் ஆட்சிபீடம் ஏறியமை
ii. பலமான மத்திய அரசாங்கம்
iii. காலிங்க மற்றும் பாண்டியவ வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட ஆட்சியதிகாரப் போராட்டம்
iv. பொருளாதார வீழ்ச்சி

(19) ‘கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதன்’ எனும் புகழ்நாமத்தைப் பெற்ற இரண்டாம் பராக்கிரமபாகுவின் இராசதானி எது?

i. யாப்பகூவ
ii. குருணாகலை
iii. கம்பொல
iv. தம்பதெனிய

(20) சில வரலாற்று சம்பவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. பன்சிய பனஸ் ஜாதகய புத்தகம் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டமை
B. கி.பி.1247 இல் சந்திரபானு எனும் ஜாவா நாட்டு ஆக்கிரமிப்பாளன் பெரும் படையுடன் இந்நாட்டிற்கு வந்திறங்கினான்.
C. சப்புமல் குமாரனின் தலைமையில் படையனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொண்டமை.
D. இபின்பதூதா எனும் அறபு நாட்டு தேச சஞ்சாரி கி.பி.1344 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்றமை.

மேற்கூறப்பட்ட விடயங்களை ஒழுங்கு முறைப்படி வரிசைப்படுத்தினால் சரியான விடையாக அமைவது பின்வருவனவற்றில் எது?.

i. ABCD
ii. BADC
iii. BACD
iv. CBDA

(21) யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த முதலாவது மன்னன்.

i. விஜய கூழங்கை மன்னன்
ii. வரோதய மன்னன்
iii. சங்கிலி மன்னர்
iv. குலசேகர மன்னன்

(22) இரண்டாம் நகராக்கத்தின்கீழ் உள்நாட்டு வர்த்தகம் சம்பந்தமாக புதிய சட்டங்கள் குறிப்பிடப்பட்ட மூலாதாரம் எது?

i. மகாவம்சம்
ii. குருணாகல்
iii. விசுக்திமார்க்கய
iv. தம்பதெனி சதிகாவ

Education கல்வி

(23) 1ம் விமலதர்மசூரிய மன்னன் ஆட்சிக்கு வந்தவுடன் எதிர்கொண்ட சவால் அல்லாதது

i. சட்ட ரீதியான ஆட்சி உரிமை இல்லாமை

ii. வீழ்ச்சியுற்றிருந்த பௌத்த சமயத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டியிருந்தமை

iii. கண்டி இராச்சியத்தை சீதாவக்கை ஆதிக்கத்தில் இருந்து காப்பாற்ற வேண்டியிருந்தமை

iv. ஒல்லாந்தரின் உதவியுடன் மலை நாட்டை விடுவித்தல்

(24) 'அ' நிரலில் குறிப்பிடப்பட்ட வரி வகைகளுக்கு 'ஆ' நிரலில் பொருத்தமானதை இணைக்க.

| அ | ஆ |
|---|---|
| i. குருவே பத்த | A. வனைதலுக்கான வரி |
| ii. ரதா பத்த | B. போக்குவரத்துக்கான வரி |
| iii. படஹெலபத்த | C. யானை பிடித்தலுக்கான வரி |
| iv. மடிகே பத்த | D. நெசவுக்கான வரி |

i. CDAB ii. CDBA iii. BDAC iv. BADC

கீழே கொடுக்கப்பட்டுள்ள நிரலில் A தொடக்கம் C வரையான தகவல்களைப் பயன்படுத்தி 25 ஆம் 26 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | யுத்தத்தின் பெயர் | சிங்கள அரசர்கள் | போர்த்துக்கேய தலைவர்கள் |
|---|---|---|---|
| A 1594 | D கன்னொருவ | G 1ம் விமலதர்மசூரியன் | J தியாகுதமெல்லோ கஸ்ரோ |
| B 1630 | E ரன்தெனிவல | H செனரத் மன்னன் | K பேரோலோபேஸ் த சூசா |
| C 1638 | F தந்துரை | I 2ம் இராஜசிங்க மன்னன் | L கொன்ஸ்தாந்தின த சா |

(25) கண்டி இராச்சியத்துடன் போர்த்துக்கேயர் செய்த தந்துரை போர் சம்பந்தமான தகவல்கள் அடங்கியுள்ள விடைத் தொகுதியாவது

i. AGKF ii. AFGK iii. AEKG iv. BFGK

(26) கி.பி.1638 மலை நாட்டு இராச்சியத்துடன் போர்த்துக்கேயர் செய்த போர் சம்பந்தமான தகவல்கள் அடங்கிய விடைத் தொகுதி எது?

i. CDGF ii. EHGF iii. CGDF iv. CDFG

(27) 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய தசாப்தங்கள் சிலவற்றிலும் கைத்தொழில் துறையில் அதிகளவு வளர்ச்சி கண்ட ஒரே ஆசிய நாட்டுக்கு உதாரணம்

i. காம்போஜய ii. யப்பான் iii. இந்தோனீசியா iv. தாய்லாந்து

கைத்தொழில் புரட்சி காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A. மக்களுக்கு தாங்க முடியுமான விலையில் பொருட்கள் வாங்கக் கூடியதாக இருத்தல்

B. சமூகத்தில் வர்க்க பேதங்கள் ஏற்பட்டமை

C. கூட்டு வர்த்தகம் ஆரம்பமானமை

D. நகரத்தில் மக்கள் பெருக்கம் கூடுதல்

Education கல்வி அධ්‍යාපන

E. முதலாளி, தொழிலாளி வர்க்கத்தினரிடையே பிரச்சினை (முரண்பாடு) உருவாகி தொழிலாளர் சங்கம் தோன்றியமை

வினா இல 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க மேலேயுள்ள A,B,C,D,E என்ற எழுத்துக்களின் மூலம் தரப்பட்டுள்ள கூற்றுக்களைப் பயன்படுத்துக.

(28) மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களில் சமூகத் துறையுடன் சம்பந்தப்பட்ட மாற்றம்

i. A மற்றும் E ii. A மற்றும் D iii. A மற்றும் B iv. B மற்றும் E

(29) மேலே கொடுக்கப்பட்ட வித்தியாசங்களுள் அரசியல் துறையுடன் தொடர்புபட்டது

i. A மற்றும் E ii. B மற்றும் D iii. A மற்றும் B iv. B மற்றும் E

(30) கி.பி.1800 ஆம் ஆண்டில் குவானோ உரம் உற்பத்தி செய்யப்பட்ட நாடாகக் கருதப்படக் கூடியது

i. இந்தியா ii. தென்ஆபிரிக்கா iii. அலெக்சாந்திரியா iv. ஒஸ்ரியா

(31) 1664ம் ஆண்டு இந்தியாவில் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திர நகர் ஆகிய இடங்களில் வர்த்தக நிலையங்களை ஆரம்பித்த இனத்தவர்.

i. பிரித்தானியர் ii. பிரான்சிய இனத்தவர் iii. போர்த்துக்கேயர் iv. ஜேர்மன் இனத்தவர்

(32) 1848 இரண்டாம் சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய தலைவர்களுள் தலைமைப் பிக்குவின் உதவியுடன் தம்புள்ளை விகாரையில் அரசனாக முடிசூடிக் கொண்டவர்.

i. வீரபுரன் அப்பு ii. ஹங்குரன்கெந்த டிங்கிராவ

iii. பூட்டாவே ரட்டேரால iv. கொங்காலேகொட பண்டா

(33) 1818 சுதந்திரப் போராட்டத்தின் பின் மலை நாட்டின் முழுமையான அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு பிரித்தானியரினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்ன பெயரில் அழைக்கப்படுகிறது?

i. 1818 நவம்பர் ஒப்பந்தம் ii. 1833 கோல்புறூக் ஒப்பந்தம்

iii. 1815 மலைநாட்டு உடன்படிக்கை iv. மக்கலம் சீர்திருத்தம்

(34) பிரித்தானிய அரசாங்கத்தால் வடக்கு, தெற்குப் பகுதிகளுள் ஒழுங்கமைந்த மிஷனரி இயக்கம் எது?

i. லண்டன் மிஷனரி இயக்கம் ii. சேர்ச் மிஷனரி இயக்கம்

iii. வெஸ்லியன் மிஷனரி இயக்கம் iv. அமெரிக்கன் மிஷனரி

கீழே A தொடக்கம் E வரை கொடுக்கப்பட்ட தகவல்களின்படி 35 மற்றும் 36 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க.

A லக்மினி பஹன B லங்கா நிதானய C சரசவி சந்தரெஸ

D உதய பானு E மாசிக்கதேக்க

(35) மேலே தரப்பட்ட தகவல்களின்படி பௌத்த கருத்துக்களை வெளிப்படுத்திய வெளியீடுகளை உள்ளக்கிய விடைத் தொகுதி எது?

i. C மற்றும் D ii. A மற்றும் B iii. A மற்றும் C iv. C மற்றும் B

(36) மேலே தரப்பட்ட தகவல்களின்படி கிறிஸ்தவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்திய வெளியீடுகளை உள்ளக்கிய விடைத் தொகுதி எது?

i. C மற்றும் A ii. B மற்றும் E iii. A மற்றும் B iv. D மற்றும் E

(37) 1915 சிங்கள முஸ்லிம் கலவரத்தின் போது சிங்களத் தலைவர்களின் ஒத்துழைப்புடன் வேலை செய்த தமிழ் மக்கள் தலைவர்

i. சேர் ஆறுமுகம் நாவலர் ii. சேர் பொன்னம்பலம் அருணாசலம்

iii. சேர் பொன்னம்பலம் இராமநாதன் iv. சேர் எம்.சீ.சித்திலெப்பை

(38) அங்கவீனமுற்ற பிரித்தானிய இராணுவ வீரர்களுக்கு உதவி புரிவதற்காக பொப்பி மலர் விற்பனைக்கு மாற்றாக இந்நாட்டில் இடதுசாரித் தலைவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் எது?

i. இலங்கைச் சங்கம்
ii. சூரியகாந்தி மலர் விற்கும் சங்கம்
iii. மந்திரி சபை
iv. இலங்கை தேசிய சங்கம்

(39) இலங்கைக்கு முதன் முதலாக மாகாண ரீதியிலான தெரிவு முறை அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பு எது?

i. மனிங் டெவன்ஷயர் யாப்பு
ii. குறூமக்கலம் யாப்பு
iii. டொனமூர் யாப்பு
iv. மனிங் யாப்பு முறை

(40) கீழே A நிரலில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்புகளும் B நிரலில் அந்த யாப்புக்களில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய அம்சங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சரியாக இணைக்கும் போது கிடைக்கும் விடைத் தொகுதி.

| A நிரல் | B நிரல் |
|---|---|
| i. கோல்புறூக் சீர்திருத்தம் | A சர்வசன வாக்குரிமை |
| ii. மனிங்டெவன்ஷர் சீர்திருத்தம் | B சட்டவாக்க நிர்வாக சபைகள் உருவாக்கப்பட்டன. |
| iii. டொனமூர் அரசியல் யாப்பு | C மக்கள் வாக்கெடுப்பு தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசியல் திட்டத்தில் முக்கியம் பெறல். |
| iv. குறூமக்கலம் சீர்திருத்தம் | D குறிப்பிட்டளவு பிரதிநிதிகள் தெரிவு செய்வு |

i. BCAD
ii. ACDB
iii. BCDA
iv. ABCD

Education கல்வி අධ්‍යාපන

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| දෙවන වාර පරීක්ෂණය | 2018 | 11 ශ්‍රේණිය |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **Second Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **வரலாறு** | **II** | **மூன்று மணி** |
| **ඉතිහාසය** | **II** | පැය තුනක් |
| ***History*** | **II** | **Three Hours** |

பகுதி II

**கவனத்திற்கொள்க.**

- **பகுதி I இன் முதலாம் வினா கட்டாயமானது.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.**

**பகுதி I**

(01) **(அ)** கீழே **(i)** இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் **குறித்துப்** பெயரிடுக.

i. கலாஓயா, கல்ஓய, யோதவாவி, பாகியங்கல, அநுராதபுரம், நல்லூர், லங்காபடுன, ஹுருளுவாவி, செங்கடகல, கொடவாய, மகியங்கனை, இப்பன்கடுவ (12 புள்ளிகள்)

ii. உரோம், அலெக்சாந்திரியா, பட்டேவியா, பிரித்தானிய தீவுகள், சிந்து நதி, குமரிமுனை. (06 புள்ளிகள்)

**(ஆ)** கீழே A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நபர்களை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

i. A. ரோம நாட்டிற்கு கண்ணாடி மணிகளைப் பெற்று வருவதற்காக தூதரக அதிகாரிகளை அனுப்பிய போது இந்நாட்டை ஆட்சி செய்த மன்னன்.

B. கம்பளை இராசதானிக் காலத்தில் இலங்கை மீது ஆக்கிரமிப்பொன்றை மேற்கொண்ட சீனத்தளபதி.

C. இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுனர்.

D. அரசன் நாட்டு மக்களுக்கு தெய்வமாக தோற்றம் தர விரும்பிய விதங்களில் தம்புள்ளை விகாரை அமைந்துள்ள பாறைக் கல்வெட்டில் நரேஸ்வர எனும் பெயரில் அறிமுகமாகிய மன்னன்.

கீழே A,B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தருக.



படம் - A

(ii.) 1. A யினால் காட்டப்பட்டுள்ள படத்திலுள்ள நபர் யார்?

2. இவரினால் ஆட்சி செய்யப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க நகரம் எது?

3. இவரால் வெளியேற்றப்பட்ட வெளிநாட்டு இனத்தவர் யார்?

4. இச்சித்திரத்தை வரைந்தவர் யார்?



படம் - B

(iii)

1. Bயினால் காட்டப்படும் கண்டுபிடிப்பின் பெயர் யாது?

2. இந்தக் கண்டுபிடிப்பு எந்தக் கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டது?

3. இதைக் கண்டுபிடித்த நாடு எது?

4. இதனை நிர்மாணித்தவர் யார்?

## பகுதி II

(02) i. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலயக் குகைகள் மூன்றினைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்ட தொழில் ரீதியாக ஒன்றுபட்டு வாழ்ந்த குடியிருப்புக்களை ஒழுங்கின்படி தருக.

அ. கோபாலகாம   ஆ. கேவட்டகாம

இ. கசீகாரகாம   ஈ. முணிகாரகாம (4 புள்ளிகள்)

iii. முன் வரலாற்றுக் கால குடியேற்றத்தின் தன்மை பற்றி 2 காரணிகளின் துணையுடன் விபரிக்க. (5 புள்ளிகள்)

iv. வரலாற்றுக் கால குடியேற்றத்தின் கட்டமைப்பும், தன்மை பற்றி 3 காரணிகளின் துணையுடன் விபரிக்க. (6 புள்ளிகள்)

(03) i. இலங்கையின் முதலாவது நகராக்கத்திற்குரிய ஆட்சி மையங்கள் இரண்டையும், இரண்டாவது நகரமயமாக்க யுகத்திற்குரிய ஆட்சி மையங்கள் ஒன்றையும் பெயரிடுக. (3 புள்ளிகள்)

ii. முதலாவது நகராக்க யுகத்தைச் சேர்ந்த இறுதி நிர்வாக மத்திய நிலையம் வீழ்ச்சியடை வதற்கான காரணங்கள் நான்கை எழுதுக. (4 புள்ளிகள்)

iii. இலங்கையின் இரண்டாவது நகராக்கலின் மத்திய நிலையமாக ஈரவலயம் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விபரிக்க. (5புள்ளிகள்)

iv. இந்நாட்டை ஆட்சி செய்த மிகச் சிறந்த ஆட்சியாளனாகக் கருதப்படக்கூடிய இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் சேவைகள் இரண்டினை குறிப்பிட்டு விபரிக்க. (6புள்ளிகள்)

(04) i. போர்த்துக்கேயரிடம் தஞ்சமடைந்த பின்வருவோர் ஞானஸ்தானம் பெற்ற பின் அவர்களின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. குசுமாசனதேவி   B. யமசிங்ஹ பண்டார   C. கோணப்பு பண்டார. (3 புள்ளிகள்)

ii. கண்டி இராச்சிய காலத்தில் தவறு செய்வோருக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. 1ம் விமலதர்மசூரிய மன்னனால் ஆற்றப்பட்ட சமய, பொருளாதார மற்றும் போர்த்துக் கேயரிடமிருந்து கண்டி இராச்சியத்தை பாதுகாக்க எடுக்கப்பட்ட செயற்திட்டங்களை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கண்டி இராசதானியின் சமூக அமைப்பு காணப்பட்ட முறை பற்றி மூன்று உதாரணங்களுடன் விபரிக்க. (6புள்ளிகள்)

(05) i. அந்நியர் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்களில் 1818 சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் இருவரையும், 1848 போராட்டத் தலைவர் ஒருவரினதும் பெயர் தருக. (3புள்ளிகள்)

ii. 1818 போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் இரண்டும் 1848 சுதந்திரப் போராட்டம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் இரண்டும் குறிப்பிடுக. (4புள்ளிகள்)

iii. கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின்கீழ் வசமானதற்கான இரண்டு காரணிகளை விளக்குக. (5புள்ளிகள்)

iv. போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தருக்கு கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடியாமைக்கான காரணத்தை 3 காரணிகளின் துணையுடன் விளக்குக. (6புள்ளிகள்)

## பகுதி III

(06) i. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியப் புத்தகங்கள் எழுதிய பிரபலமான (இங்கிலாந்தின்) நூலாசிரியர்கள் மூவரினது பெயர் குறிப்பிடுக. (3புள்ளிகள்)

ii. கீழே A,B,C மற்றும் D என்பவற்றுள் வரலாற்று நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்ட நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.

A. மொனாலிஸா ஓவியத்தை வரைந்தவர்

B. பிலிப்பைன் தீவை கண்டுபிடித்த தேசசஞ்சாரி

C. ஆபிரிக்காவின் தென் முனைக்கு புயல் முனை எனப் பெயரிட்ட நாடுகாண் பயணி

D. அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்த நபர் (4புள்ளிகள்)

iii. கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு அதில் இரண்டை விளக்குக. (உதாரணம் தந்து விளக்குக) (5 புள்ளிகள்)

iv. மறுமலர்ச்சி, நாடுகாண் பயணத்திற்கு அடிப்படையாக அமைந்த விதத்தை உதாரணம் தந்து விளக்குக. (6 புள்ளிகள்)

(07) i. பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சி நிகழ்ந்த 03 துறைகளும் யாவை? (3 புள்ளிகள்)


ii. பிரித்தானியா ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட கைத்தொழில் புரட்சியில் முன்னணியில் இடம்பெற அடிப்படையாக அமைந்த நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. கைத்தொழில் புரட்சி விவசாயத் துறையிலும் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. காரணங்கள் இரண்டின் துணை கொண்டு விபரிக்க. (5புள்ளிகள்)

iv. கைத்தொழில் மயமாதல் காரணமாக ஏற்பட்ட பிரதிகூலங்கள் 3ஐக் குறிப்பிட்டு விளக்குக. (6புள்ளிகள்)

Education கல்வி

வினா 01 இன் "அ" பகுதியின் (i) இக்கான இலங்கைப் படம்




Education கல்வி அධ්‍යාපන

வினா 01 இன் “அ” பகுதியின் (ii) இக்கான உலகப் படம்



Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page